மன்றப்பொருள்

2020 ம் ஆண்டு ஆகஸ்ட் 31–08–2020 ம் தேதி திங்கள்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற **சாதாரணக்கூட்டம்** பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.எஸ். பிரபாகரன்**
**தனி அலுவலர்.**

1. ஆணையர் (கூ.பொ) அவர்களின் ஆகஸ்ட் 2020ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
   அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்

2.அரசாணை ( பல்வகை ) எண். 145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ–1) துறை நாள். 21.09.2011–ன் படி 2020–2021 ம் ஆண்டிற்கு கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகை ரூ. 50,000/– ஐ செலுத்தவும் , மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்
கோ. எண். 2683/2016/சி1

3. பண்ணுருட்டி நகராட்சி– தெருவிளக்கு தனியார் மூலம் பராமரிப்பு தெருமின் விளக்குகள் 1x40 வாட்ஸ் மொத்தம் 1600 எண்கள் குழல் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தெருகுழல் மின் விளக்குகள் 1600 எண்கள் பராமரிப்பு பணிகள் 2020–2021–ம் நிதியாண்டிற்கு தனியார் மூலம் மேற்கொள்ள 13.28 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகரமன்ற தீர்மான எண். 495 நாள் 31.01.2020–ல் அனுமதி பெறப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் தொழிற்நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 04.03.2020–ல் வரைவு கடிதம் மற்றும் மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் கொரேனா வைரஸ் நோய் (COVID-19) –ன் தடுப்பு நடவடிக்கைக்கு தற்சமயம் தமிழக அரசும், மத்திய அரசும் ஊரடங்கு 144 தடை உத்திரவை அறிவித்ததை தொடர்ந்து அரசு அலுவலகங்கள் ஸ்தம்பித்த நிலையில் மேற்கண்ட பணிக்கான உத்திரவு வர காலதாமதம் ஆகியுள்ளது.
மேலும், தற்போது மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் 05.08.2020–ந் தேதிய ந.க.எண். 5878/2020/Do1 எண்ணிட்ட கடிதத்தின் மூலம் தெரு விளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு ஓராண்டு காலத்திற்கு அனுமதி வழங்கியுள்ளார். மேற்கண்ட பணிக்கு 2019–20–ம் ஆண்டிற்கான தர நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தின் (SOR) அடிப்படையில் ரூ.13.28 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு நிர்வாக அனுமதி வேண்டி அனுப்பியதில் நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை பொறியாளர் அவர்கள் தற்போதைய 2020–2021–ம் ஆண்டிற்கான தர நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் (SOR) ரூ.15,62,266/–க்கு மதிப்பீடு நிர்ணயம் செய்து அனுமதி அளித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ. 15,62,266/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ. 15,62,266/–க்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. தெருவிளக்கு பணியின் அவசர அவசியத்தை கருத்தில்கொண்டு நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 0403 / 2020 / இ2

4. வடகிழக்கு பருவமழை தற்போது மழை பொழிந்து வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பண்ணுருட்டி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு பகுதியில் உருவாகும் மழைநீர் வார்டுகளில் உள்ள கால்வாயில் இருந்து வரப்பெறும் அனைத்து நீர்களும் வாலாஜா வாய்க்கால் மூலம் வழிந்தோட வேண்டிய சூழல் உள்ளது. இந்நிலையில் வாலாஜா வாய்க்காலில் புல், பூண்டு, மரம், செடி கொடிகள், கோரைப்புல் ஆக்கிரமித்து உள்ளதால் மழை நீர் வழிந்தோடுவதால் தேக்கம் ஏற்பட்டு பொது சுகாதாரப்பணிகள் பாதிக்கப்படுகிறது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொதுமக்களின் நலன் கருதியும் வாலாஜா வாய்க்கால் சுத்தம் செய்ய வேண்டியுள்ளதால் அதன் (வாய்க்கால்) ஆரம்ப பகுதியான வார்டு எண்.1 ஆண்டிக்குப்பம் முதல் வார்டு –2 விழமங்கலம் பகுதி, வார்டு–3 விழமங்கலம் காலனி வழியாக வார்டு எண்.5–ன் வழியாகவும் வார்டு எண். 8,10,11 வார்டு எண். 15, 16–ன் மழைநீரை அப்புறப்படுத்தும் விதமாக திருவதிகை பகுதியுடன் வாலாஜா பகுதியில் மேற்படி வாய்க்கால் முழுவதும் சுத்தம் செய்திட வேண்டியுள்ளதால் பொதுமக்களின் நலன் கருதியும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் நகரத்தின் சுகாதாரத்தை மேம்படுத்திட இப்பணியினை செய்திட அவசர, அவசியம் கருதி பிரதான வாய்க்கால் சுத்தம் செய்து மழை காலத்தில் உருவாகும் தண்ணீர் தேக்கமின்றி சென்றிட வாலாஜா வாய்க்கால் சுத்தம் செய்திட உத்தேச செலவினம் கடந்த ஆண்டு ஒப்பிட்டு ரூ.9.00/– லட்சம் (ஒன்பது லட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். /2020/எச்1**

5. பண்ணுருட்டி நகராட்சியில் நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2020–21 (TURIP) –ன் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்கு சாலைகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.200.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். 9052/2020/இ3 நாள்.17.07.2020ந் தேதிய கடிதத்தில் நிர்வாக அனுமதி அளித்துள்ளார்கள். அதன்படி இப்பணிக்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்க கோரி முதன்மை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குனரகம், சென்னை–28 அவர்களுக்கு நாள்.20.07.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி முதன்மை பொறியாளர், சென்னை அவர்களின் ந.க.எண். 25039/2019/டிஒ1 நாள். 22.07.2020ந் தேதிய தொழிற்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவு வரப்பெற்றது.

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பாணை தினசரி நாளிதழ் ஒருநாள் (தமிழ்நாடு) மற்றும் ஆங்கிலம் இவைகளில் 50 சதுர சென்டிமீட்டர் பரப்பளவிற்கு மிகாமல் விளம்பரம் செய்யக்கோரி மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புதுறை, தலைமை செயலகம், சென்னைக்கு கடித வரைவு அனுப்பி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தை கீழ்கண்ட தினசரி நாளிதழ்களில் 'ஐடியா பிராண்ட் சொல்யூஷன்ஸ்' நிறுவனம் விளம்பரம் செய்யப்பட்டு இதற்கான பட்டியல் கேட்டு வரப்பெற்ற விபரம்.

| வ. எண் | தினசரி நாளிதழ் பெயர் | பட்டியல் எண் & நாள் | விளம்பர கட்டண தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | த இந்து (தமிழ்நாடு பதிப்பு) | 1684 நாள். 23.07.2020 | ரூ. 99,200.00 |
| 2. | மாலை முரசு (தமிழ்நாடு பதிப்பு) | 1684 நாள். 23.07.2020 | ரூ. 20,000.00 |
| | | | ரூ. 1,19,200.00 |
| | | கூடுதல் ரூ. 2.5% SGST | ரூ. 2,980.00 |
| | | 2.5% CGST | ரூ. 2,980.00 |
| | | ஆக மொத்தம் கூடுதல் = | ரூ. 1,25,160.00 |

மேற்கண்ட விளம்பர கட்டணத்தை மேற்கண்ட விளம்பர நிறுவனம் 'ஐடியா பிராண்ட் சொல்யூஷன்', சென்னை–34 க்கு செலுத்த மன்ற அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 767 /2020/இ1

6. பண்ணுருட்டி நகராட்சி, தெருகுழல் மின் விளக்குகள் தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தெரு குழல் மின் விளக்குகள் 1x40 வாட்ஸ் மொத்தம் 1600 எண்கள் பராமரிப்பு பணிக்கு 2020–2021ம் நிதியாண்டிற்கு ரூ. 15.62 இலட்சத்திற்கு மேற்கொள்ள திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகர்மன்றத்திற்கு நாள் 07.08.2020–ல் பொருள் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து தெரு விளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை தயார் செய்து தினசரி நாளிதழில் மாவட்ட அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழில் ஒரு நாள் மட்டும் 50 சதுர சென்டிமீட்டர் பரப்பிற்கு மிகாமல் பிரசுரம் செய்ய வேண்டி செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம், கடலூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு இதற்கான பட்டியல் கேட்டு வரப்பெற்ற விபரம் வருமாறு.

| வ. எண் | தினசரி நாளிதழ் பெயர் | பட்டியல் எண் & நாள் | விளம்பர கட்டண தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மக்கள் குரல் (தமிழ்நாடு பதிப்பு) | CHEM 202101512 நாள். 14.08.2020 | ரூ. 11,400.00 |
| | | 2.5% SGST | ரூ. 285.00 |
| | | 2.5% CGST | ரூ. 285.00 |
| | | கூடுதல் = | **ரூ. 11,970.00** |

மேற்கண்ட விளம்பர கட்டணத்தை மேற்கண்ட மக்கள் குரல் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 0403 /2020/இ2

7. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பொதுமக்களுக்கு பல்வேறு கொள்ளளவுள்ள 18 எண்ணிக்கைகள் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் அத்தியாவசிய பணிக்கு போதிய பணியாளர்கள் (Tank Operator) இல்லாததால் இந்நகராட்சி மூலம் காலை மற்றும் மாலை இருவேளைகளிலும் குடிநீர் விநியோகம் செய்ய சிரமம் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி 2020–21–ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையிலும் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.10,00,000/– (பத்து லட்சம்) மட்டில் செலவினத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. குடிநீர் அத்தியாவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை 2019–2020ம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட அதே விலைவிகிதப்படி ஒப்பந்தப்பணியாளர்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 767 /2020/இ1**

இடம் – பண்ணுருட்டி
நாள் – 31.08.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பண்ணுருட்டி நகராட்சி.